# <u>DEPOSITION OF WITNESS</u>

## <u>IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.</u>

**CASE NO.**

**PROSECUTION OF WITNESS :**

| | |
|---|---|
| NAME | : |
| FATHER'S NAME | : |
| VILLAGE | : |
| TALUK | : |
| CALLING | : |
| RELIGION | : |
| AGE | : |
| DATE | : **13.05.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969)

(Act 44 of 1969)

CC.No.142/2026 (JM.No.II, DHARMAPURI)

13.05.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–1 : திரு.வேலன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.03.2025 வரும் மாலை சுமார் 07.00 மணிக்கு கிருஷ்ணாபுரம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் சோனியா அவர்களுக்கு கிடைத்த தகவலின்பேரில் நான் தலைமை காவலர் சிவஞானம் என்பவரும் மது விலக்கு வழக்குகள் சம்பந்தமாக ரோந்து பணியில் இருந்த போது எங்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் 19.00 மணிக்கு கிருஷ்ணாபுரம் காவல் நிலைய சரகம் திப்பம்பட்டி அண்ணாமலைகொட்டாய் கிராமத்தில் திரௌபதி அம்மன் மளிகை கடை மற்றும் மீன் கடை அருகே விசாரித்தபோது ஒரு கோணிப்பையில் சந்தேகப்படும்படி ஆஜர் எதிரி வேடியப்பன் எடுத்து ஓடினார். அதை பிடித்து விசாரணை செய்தபோது 180 ml அளவு கொண்ட Express பிராந்தி பாட்டில்கள் –9 யை உரிய அரசின் அனுமதி இல்லாமல் சட்ட விரோதமாக சில்லரை விற்பனை செய்ய வைத்திருந்த பாட்டில்களை நான் மற்றும் தலைமை காவலர் சிவஞானம் இருவரும் பாட்டில்களை காவல் உதவி ஆய்வாளர் சோனியா அவர்களிடம் ஒப்படைத்தோம். பின்பு எதிரியை கைது செய்து நான் மற்றும் தலைமை காவலர் சிவஞானம் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜருடன் கூடிய அழித்தல் மகஜர் தயார் செய்தோம். அது சம்மந்தமாக தனி அறிக்கை காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் அதில் சாட்சியாக இருந்து நானும், தலைமை காவலர் சிவஞானம் என்பவரும் கையெழுத்திட்டோம். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் சோனியா என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். கைப்பற்றுதல் மகஜருடன் கூடிய அழித்தல் மகஜர் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

எங்களுக்கு எதிரி மதுபான பாட்டில்களை விற்கிறார் என்று தனிநபர் யாரும் தகவல் சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, உயர் அதிகாரிகள் சொன்னதால் நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். தகவல் யார், எப்போது சொன்னார்கள் என்று காவல் உதவி ஆய்வாளரிடம் நான் கேட்டு அறிந்து கொள்ளவில்லை. சம்பவ இடம் திப்பம்பட்டி to காரிமங்கலம் மெயின்ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். எதிரி கல்மீன் வியாபாரம் அங்கு செய்துகொண்டுள்ளார் என்றால் சரிதான். மீன் வியாபாரம் செய்வதால் பொதுமக்கள் அங்கு மீன் வாங்க வருவார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் அரசு மதுபான கடைக்கும் இடையே 400 மீ தொலைவு தான் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரமான மாலை 07.00 மணிக்கு அரசு மதுபான கடை திறந்திருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தபோது பொதுமக்களை யாரும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் முன்வராததால் சேர்க்கவில்லை. எதிரி இது போன்று பாட்டில்களை விற்கவில்லை என்றாலும்,அவ்வாறு இருந்திருந்தால் மாதிரி Sample எடுத்து ஆய்வு கூடத்திற்கு அனுப்பி இருப்போம் என்றாலும், நீதிமன்றத்தில்

ஒப்படைத்திருப்போம் என்றாலும், சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியிடம் இருந்து மது பாட்டில்களை கைப்பற்றவில்லை என்றாலும், எதிரியின் மீது புள்ளி விவரத்திற்காக உயர் அதிகாரிகள் கேட்டுகொண்டதற்காக பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.05.13 17:41:14 +0530